1984 மார்ச் 7]

இறது என்பது போதாதுதான். இன்னும் விவரமான தகவல்களைக் கொடுக்க வேண்டும். அதைப் பெறுவதற்கான உரிமை இந்த அவைக்கு இருக்கிறது என்பதை தான் ஒப்புக்கொள்கிறேன். எனவே எல்லாத் தகவல் களையும் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் இங்கே வந்திருந்து கேள்வி கேட்டால், நான் அதற்கு ஏற்ப விவரமாகப் பதில் சொல்ல ஆசைப் படுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த எக்ஸ்பெரி மென்டு நடத்தப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன. இதற்கான அறிக்கை இங்கேயே தயாரிக்கப்படுகிறதா அல்லது அந்த ரிப்போர்ட்டும் அமெரிக்கா விலிருந்து தயாரிக்கப்படுகிறதா? ஆறு மாதங்களாகியும்கூட இது குறித்த அறிக்கை வாராததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதைத் தனியான துறை ஒன்று நடத்தியது. எனவே அவர்களிடமிருந்துதான் இந்த ரிப்போர்ட்டை எதிர்பார்க்கிறோம். மெட்ரோ வாட்டர் இதைச் செய்ய வில்லை. நேரடியாக அவர்கள் இதைச் செய்யவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள் இதைச் செய்தார்கள். எனவே அந்த டிபார்ட்மென்டிலிருந்து இதை எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த அக்கறை யோடு இதை வலியுறுத்திக் கேட்பதன் காரணத்தால், உடனே ஒரு டி.ஓ. லெட்டர் எழுதி அந்த அறிக்கையை அங்கிருந்து எவ்வளவு விரைவில் வர வழைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் வரவழைக்க ஏற்பாடு செய்யப் படும். மீண்டும் உறுப்பினர்கள் இங்கே வந்து கேள்வி கேட்கிறபோது, இந்தத் தகவல்களையெல்லாம் விரிவாகக் கொடுக்க இயலும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 74 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி நிலையங்கள்.

*68. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கிராம நிர்வாக அதிகாரிகள் பயிற்சிக்கென, தனியே பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அந்நிலையங்கள் எங்கெங்கு எப்பொழுதிலிருந்து செயல்படத் தொடங்கும்?